# சங்க இலக்கியத்தில் மெய்ப்பாடுகள்

**முனைவர் பா. ரம்யா**

**தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி ,**

**மதுரை – 18.**

30

**ஆய்வுச் சுருக்கம்**

பேச்சு மொழி தோற்றத்திற்கு முன்பே மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகளை உடலசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புறக்குறிகள் மெய்ப்பாடுகள் எனப்படும். பாட்டில் புலவனின் உள்ளத்துணர்ச்சி இயல்பாகப் படிகின்றது. பாட்டில் வெளிப்படும் புலவனின் உணர்ச்சி வெளிப்பாட்டை மெய்ப்பாடு எனலாம். பாட்டின் பொருளை விளங்கிக் கொள்கின்ற நடிப்பு, மெய்பாடு எனப்படும். மெய்ப்பாட்டின் இயல்பினை தொல்காப்பியர் எண்வகையாக குறிப்பிட்டுள்ளார். எண்வகை மெய்ப்பாடுகளில் முதல் நிலையில் இருப்பது 'நகை' என்பதாகும். இம்மெய்ப்பாடு சங்க இலக்கிய பாடலில் வெளிப்படும் தன்மையினை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

மெய்ப்பாடு-விளக்கம் - மெய்ப்பாட்டில்-நாடகக் கூறு - நகை மெய்ப்பாடு – எள்ளல் – இளமை – பேதமை – மடன்.

**முன்னுரை**

தமிழ் மொழியில் பழம்பெரும் இலக்கண நூலாகப் போற்றப்படுவது தொல்காப்பியம். தொல்காப்பியர் உணர்ச்சியைச் செய்யுள் உறுப்புகளில் ஒன்றான 'மெய்ப்பாடு' என்று பாகுபடுத்தியுள்ளார். இதனை,

**"உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்**

**மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந்தோரே"[1]**

எனும் நூற்பா குறிப்பிடுகிறது. இதன் மூலம் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளையும், சிக்கல்களையும், இன்ப துன்பங்களையும் அறிந்து கொள்ளும் விதமாகப் படைக்கப்படுகின்றன. அதில் சங்க இலக்கியம் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்டினை முன்வைத்து, சங்க இலக்கிய மாந்தர்களின் அக, புற உணர்வுகளின் வெளிப்பாட்டினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மெய்ப்பாடு-விளக்கம்**

மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் நிகழும் குறிப்பினை வெளிப்படுத்துவது என்பதாகும். மெய்-உடல், பாடு-நிகழும் தன்மை. உள்ளத்தில் தோன்றும் நிகழ்ச்சிக்கு ஏற்ப உடலின்கண் ஏற்படும் வேறுபாடு மெய்ப்பாடு என்று இளம்பூரணார் கூறுகிறார்.

**"நகை முதலாகிய பொருண்மை வெளிப்படுத்துதல் மெய்ப்பாடு என்பது பேராசிரியர் கருத்தாகும்."[2]**

மெய்ப்பாட்டியலை – மெய்ப்பாடுகளில் வகை, எண்வகை மெய்ப்பாடுகள்,

ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், புறனடை என ஐவகையாக வகுத்துக் காண்பர் தொல்காப்பியர். இதில் உள்ளத்து உணர்ச்சிகளால், செயல்களில் தோன்றும் மெய்ப்பாட்டினை எட்டு வகை என தொல்காப்பியம் வரையறுக்கிறது.

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப."[3]**

எண்வகை மெய்ப்பாடுகள் என்பதை நூற்பாவின் வழி விளக்குகிறது.

**மெய்ப்பாட்டில்-நாடகக் கூறு**

மெய்ப்பாடு என்பது உடம்பில் தோன்றும் அசைவுகளே நினைவுக்கு வருவதால் அது நாடகத் தொடர்புடையது. தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடு இலக்கியத்திற்கே உரியது எனச் சுட்டுகிறது.

**"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்."[4]**

ஒன்றைப்பற்றி ஆராயாமல் கூறியவுடன் அதன் பொருளை மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடாகும். இதனை இளம்பூரணார்,

**"செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச்**
**செய்தல் வேண்டுமென்பது கருத்து"[5]**

எனவும் 'இவ்விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டு செய்யுங்காற் சுவைபடச் செய்யவேண்டுதலின் ஈண்டு கூறவேண்டுமென்க' (மு.நூ.மெய். இளம்) எனச் சுட்டிக்காட்டுவதன் மூலம் கூத்துக் கலைக்கு, மெய்ப்பாடு முக்கியமானதாக கருதப்படுவதை அறியமுடிகிறது.

**நகை மெய்ப்பாடு**

நகை என்னும் சொல்லுக்கு சிரிப்பு, சிரித்தல், மகிழ்ச்சி, நகுதல் என பல பொருள்கள் கொள்ளப்பெறும். நகை என்னும் சொல்லுக்கு இலக்கண உரையாசிரியர்கள் பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர். 'நகை' என்பது இகழ்ச்சியில் பிறப்பது என்கிறார் இளம்பூரணர். 'நகை' என்பதை 'சிரிப்பு' என்கிறார் பாரதியார். இவ்வாறு பல்வேறு உரையாசிரியர்களும் நகை எனும் சொல்லுக்கு பல்வேறு விளக்கங்களைக் கூறியுள்ளனர்.

நகை தோன்றும் நிலைக்களன்களைத் தொல்காப்பியர், மெய்ப்பாட்டியலில் பகுத்துள்ளார்.

**"எள்ளல் இளமை பேதமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப"[6]**

எள்ளல் சுவை, இளமை சுவை, பேதமைச்சுவை, மடமை சுவை எனப் பிரித்துள்ளார்.

**எள்ளல்**

அகப்புற இலக்கியங்களில் நகை உணர்வுமிக்க பாடல்கள் பல இடம்பெற்றுள்ளது. குறுந்தொகையில் காமம் மிக்க கழிபடர்க் கிழவியால் பொழுது கண்டு சொல்லிய,

தலைவி, தலைவனிடம் பறவைகள் காதல் செய்து இன்புற்று பிள்ளைப்பேறு எய்தி தம் குஞ்சுகளை இனிது பாதுகாப்பது போலத் தானும் தலைவனை மணம் முடித்து மகப்பேறு எய்தி பாதுகாத்து மகிழ்தல் வேண்டும் எனத் தலைவி விரும்பினாள். என்பதனை,

**"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**

**அறியாதாமே – கொடுஞ்சிறைப் பறவை**
**இறைஉற ஓங்கிய நெறி அயல் மரா அத்த**
**இறை கொண்டமையின் விரையுமடல்**

**செலவே" (குறுந். 92)**

என்ற பாடலால் புறத்தே நிகழும் காம நிகழ்ச்சிகள் பறவைகளின் வாயிலாக எள்ளல் சுவையாக உணர்த்தப்பட்டுள்ளது எனப் பொருள் கொள்ளுதல் வேண்டும். மேலும், கலித்தொகை பாடலொன்றில் தலைவனுக்கும், தலைவிக்கும் அன்பு ஏற்படுகிறது. தலைவியின் அருளை நாடுகிறான். அப்போது தோழி, தலைவியைப் பார்த்து, நீர் தலைவனுக்கு அருள் செய்யாவிட்டால், ஊரார் பலரும் எள்ளி நகையாடும் வண்ணம் மடலேறும் செயலைச் செய்துவிடுவான் போல் தெரிகிறது என்பதை,

**"ஒண்தொடீ! நாண் இலன் மன்ற; இவன்; ஆயின், ஏஎ!**

**பல்லார் நக்கு எள்ளப்படு மடல்மா ஏறி" (கலி.61: 20-21)**

என்றும்

**"எள்ளி நகினும் வரூஉம், இடைஇடை" (கலி.61: 25)**

என்றும் சுட்டப்படுகிறது. இவ்வகையில் எள்ளல் பொருளில் இப்பாடலில் இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

**இளமை**

இளமை என்னும் பொருளைக் காணுமிடத்து, அது பிள்ளைத் தன்மைக் குறித்து அமைந்துள்ளது. குழந்தையின் தன்மையை உணர்த்தும் விதமாக புறநானூற்றில் அழகான ஒரு பாடலை எடுத்துக்காட்டலாம்.

**"குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி**

**இட்டும், தொட்டுக் கவ்வியும், துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**

**மயக்குறு மக்களை….." (புறம். 188: 3-6)**

எனும் பாடல்வரி இளமை என்னும் நிலைக்களைத் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது. கலித்தொகைப் பாடலொன்றிளல் தலைவன் தனக்கு நோய் ஏற்பட, அந்நோய்குறித்து கேட்கும் அருள் இவளுக்கு இல்லை என அயிலார் பழிக்க,

**"பொய்தல மகளையாய், பிறர்மனைப் பாடி" (கலித். 59:16)**

நீ இன்னும் விளையாட்டு மகளைப் போல இருக்கிறாய் எனக் கேட்கிறான் தலைவன். அதாவது தனது பிள்ளைத் தன்மையினின்றும் மாறாதவளாகத் தலைவி விளங்குகிறாள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**பேதமை**

பேதமை என்பது அறிவில்லாமல் செய்யும் செயல் ஆகும். இதனை அறிவின்மை என்றும் கூறுவர். வாழ்க்கையின் இன்றியமையாது அறிய வேண்டுவனவற்றை அறியாதிருத்தல் ஆகும். பேதமை என்பதற்கு கேட்டதனை உய்த்துணராது ''மெய்க்கோடல்''7 என்கிறார் பேராசிரியர்.

தலைவன் உண்மையான செல்வம் பொருள்தான் என்று கூறுவதன் மூலம் தலைவனது பேதமை காரணமாகத் தோழிக்கு நகை தோன்றுவதை,

**''பொருள் அல்லால் பொருளும் உண்டோ? என பாடிநின்**
**மருளிகொள் மட நோக்கம், மயக்கப்பட்டு**
**அயர்ந்தாயோ?'' (பா.க.13 : 10-11)**

என்னும் கலித்தொகை பாடலின் மூலம் பொருளே உண்மையான செல்வம் என்.று அறியாமையில் ஆழ்ந்து அன்பினை மறந்து கிடக்கும் தலைவனின் பேதமைக் காரணமாகத் தோழிக்கு நகை தோன்றுகிறது.

புறநானூற்றுப் பாடலில் பேகன் பிறர்க்கு கொடை வழங்கும்பொழுது அறியாமை உயைடவனாகத் திகழ்வதாகவும், பகைவரிடம் போர்புரியுமிடத்தில் அறியாமைபடான் என்பதை,

**''கடாஅ யானைக் கழற்காற் பேகன்**
**கொடை மடம் படுதல் அல்லது**
**படை மடம் படான்''**

என்ற பாடலில் பேகனின் அறிவின்மை எவ்விடத்துத் தோன்றுகிறது எவ்விடத்துத் தோன்றவில்லை என்பதைக் காட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

குறுந்தொகைப் பாடலொன்றில் பிரிந்த தலைவனை நினைத்து தலைவி வருந்துகிறாள். அத்தருணத்தில் இடியுடன் பெரிய மழை பெய்தது. அதனைக் கண்ட மயிலோ கார்காலம் என்று கூவி நின்றது. அவைகள் பேதமை உடையது என்று எண்ணுகிறாள்.

**தாநீர் நனந்தலை புலம்பக**
**கூஉந் தோழி பெரும்பே**
**தையவே'' (குறுந். 391:8-9)**

என்ற வரிகளின் மூலம் தலைவி தலைவன் மேல் அளவற்ற நம்பிக்கைக் கொண்டவனாக காணப்படுகிறான். அதனால் தான் மயில்கள் கூவியதை பேதையுடையது என்று கருதுகிறாள் என்பதை அறியமுடிகிறது.

**மடன்**

நகையின் வகையான மடமை என்பது ஒன்றை வேறொன்றாகத் திரித்துக் கூறினாலும் நம்புவது எனப் பொருள்படும். குறுந்தொகைப் பாடலொன்றில் தலைவியின் மன வருத்தத்தினால் நுதலின் பசப்பு, தோள் நெகிழ்வு ஏற்பட்டன. அறியாமையுடைய மடன் நெஞ்சை உடையவர்கள் எனக் கூறும் நிலையில் மடன் என்ற மெய்ப்பாடு ஏற்படுகிறது என்பதனை,

**''மன்றஅரா அத்த பேஎம் முதிர் கடவுள்**
**கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்**
**பசைஇப் பசந்தன்று நுதலே**
**ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தட்மென்**

**தோளே'' (குறு. 87)**

இப்பாடலின் வழி அறியமுடிகிறது.

தலைவி தலைவனின் மடமை தன்மையைத் தோழியிடம் கூறி நகையாடுவதை,

**''வதுவை யயர்வாரைக் கண்டு மதியறியா**

**வேழையை யென்றகல நக்குவந் தீயாய் நீ'' (முல்.க.14:4-5)**

எனும் கலித்தொகைப் பாடலின் மூலம் அறியமுடிகின்றது. இதில், தலைவிக்கு மணம் நிகழப்போவதை அறியாதவனாக இருக்கும் தலைவன், அதைத் தடுக்கும் வழியினை மேற்கொள்ளாமல் இருப்பதைக் கண்டு தலைவி, தோழியிடம் கூறுவதன் மூலம் தலைவனின் மடமையால் தலைவிக்கு நகை தோன்றுவதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

மெய்ப்பாடு என்பது நம் மெய்யின் கண் தோன்றும் தன்மை. இதனைத் தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் வெகுளி உவகை என்ற வகையில் அடக்குகிறார். சங்க இலக்கியம், மக்களின் வாழ்வியல் முறைகள், பண்பாடு, கல்வி, வீரம், மணம், விளையாட்டு போன்ற ''மெய்ப்பாடுகள் அடங்கிய வாழ்க்கைத் தத்துவப் பாடல்கள் என்பதை அறியமுடிகிறது. சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை மனிதர்கள் தாங்கள் வெளிப்படுத்த நினைத்த கருத்துக்களையும், உணர்வுகளையும் தெளிவுபடுத்த மெய்ப்பாடுகள் உற்ற துணையாக விளங்குகிறது என்பதை அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம், செயிற்றியனார் பொருள், 247.
2. வாழ்வியற் களஞ்சியம், ப. 85.
3. தொல். பொருள்., 247.
4. தொல். பொருள். செய்யுளியல், 196.
5. தொல். இளம்., செய்., 196.
6. தொல். மெய்., நூற்., 4.
7. கு. சுந்தரமூர்த்தி, தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை, ப. 205.

**துணைநூற்பட்டியல்**

1. சுந்தரமூர்த்தி, .கு., - தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியர்உரை,அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.
2. ----, - வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 14, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2008.